**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 44/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **தீபலெட்சுமி (அறநிலையதுறை ஆய்வாளர்)** |
| Father Name | : | **அருணாசலம்** |
| Address | : | **பெரம்பலூர்** |
| Age | : | 32/2025 |

**தேதி : 09.07.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் வசித்து வருகிறேன். நான் பெரம்பலூரில் உள்ள அறநிலையதுறை அலுவலகத்தின் ஆய்வாளராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் இல்லாத எதிரிகளையும் தெரியும். கடந்த 08.09.2024ம் தேதி திருகுடமுழுக்கு களரம்பட்டி தேம்பாடி அம்மன் கோவிலில் நடந்தது. கோவிலில் குடமுழுக்கு நடைபெறுவதற்கு முன்பு குடமுழுக்கு அன்று சிறப்பு செய்வதற்காக தேவேந்திரகுல வேளாளர் சமூகத்திலிருந்து எங்களிடம் கேட்டனர். இது தொடர்பாக வட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சு வார்த்தையில் தேவேந்திரகுல வேளாளர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் இடையே உடன்பாடு ஏற்பட்டு இருதரப்பினரும் கலந்துகொண்டு சிறப்பாக குடமுழுக்கு நடைபெற்றது. தேவேந்திரகுல வேளாளர் சார்பில் எங்களுக்கும் மண்டல பூஜையில் சிறப்பு செய்ய ஒருநாள் கேட்டனர். மீண்டும் ஒருமுறை வட்டாட்சியர் தலைமையில் ஒருமுறை அமைதி பேச்சுவார்த்தை நடந்தது.

பிறகு பேச்சுவார்த்தையில்உடன்பாடு எட்டாதநிலையில் மீண்டும் சார் ஆட்சியர் தலைமையில் 27.10.2024 அன்று நடந்தபோது சார்ஆட்சியர் மண்டல பூஜை நடந்துமுடிந்துவிட்டது. ஆதலால் மீண்டும் ஒருமுறை சிறப்பு பூஜைக்கு அனுமதி அளிக்க முடியாது என்று கூறியுள்ளார். அங்கு தேவேந்திரகுல தரப்பினர் சரி என்று ஒப்புக்கொண்டு சென்றுவிட்டனர். மறுநாள் 28.10.2024 அன்று கடைசி நாள் பூஜையாக மண்டல சிறப்பு பூஜை நடந்து முடிந்துவிட்டது. பிறகு சார்ஆட்சியர் பேச்சு வார்த்தை நடத்தும்போது ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜையில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார். பிறகு மண்டல பூஜையின் கடைசி தினத்தில் 28.10.2024 அன்று மதியம் 12.00 மணி அளவில் கும்பலாக வந்து தேவேந்திரகுல வேளாளர் தரப்பினர் கோவிலுக்கு சிறப்பு செய்வதற்காக பூஜை பொருட்களுடன் வந்தனர்.

பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கெனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியுள்ளார் என்றும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளனர் என்றும் அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர். அந்த இடத்திற்கு டி.எஸ்.பி., அறநிலைதுறை உதவி ஆணையர், ஆய்வாளர் மற்றும் அறநிலைதுறை அரசு அலுவலர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். பிரச்சனை செய்த தேவேந்திரகுல வேளாளர்குல தரப்பினர் ராஜா, தனசேகர், காந்தரூபி, வினோத், ரஜினிகாந்த், கவிதா, மோகனா, துளசி, அகல்யா ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து அநாகரிகமாக எங்களை பேசி எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர். இது தொடர்பாக எனது செயல் அலுவலர் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தேம்பாடி அம்மன் கோவிலில் 08.09.2024 தேதி அன்றுதான் கும்பாபிஷேகம் நடந்தது என்றால் சரிதான். ஏற்கெனவே தேவேந்திரகுல

வேளாளார் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர்இடையே பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று தேங்காய், பூ, பழம் பூஜை பொருட்களை வேளாளர் சமூகத்தினர் எடுத்துவந்தனர் என்றால் சரிதான். அதற்கு கோவிலிலிருந்த மற்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர் என்றால் சரிதான். மேற்படி கோவில் இந்து அறநிலையதுறையின் கீழ் இருந்தது என்றால் சரிதான். மேற்படி கோவிலில் எந்த சாதியினரும் வழிப்பாடு செய்யலாம் என்றால் சரிதான். தேவேந்திரகுல வேளாளர் கோவிலுக்குள் நுழையக்கூடாது என்று தடை உத்தரவு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

பிற்படுத்தப்பட்ட மக்கள் தகராறு செய்ததன் காரணமாகத்தான் காவல் ஆய்வாளர் கோவிலை இழுத்து மூடினார் என்றால் சரிதான். அ.சா.1 கிராம நிர்வாக அலுவலர்தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். 29.10.2024ம் தேதி அன்றுதான் செயல் அலுவலர் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் ஞாபகமில்லை. எதிரிகளின் பெயர் எனக்கு வி.ஏ.ஓ. சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். எந்த அநாகரிகமான வார்த்தைகளால் எதிரிகள் எங்களை திட்டினார்கள் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என்னை வேலை செய்யாமல் தடுக்கும்விதமாகவோ, அநாகரிகமாக பேசியோ, கலகத்தை தூண்டும்விதமாகவோ நடந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது பெரம்பலூர் காவல்நிலைய ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் எதிரிகளின் மீது ஒரு பொய்யான புகாரினை கொடுத்து அதற்கு பொய்யாக அ.சா.1 சாட்சியம் அளித்ததை ஒத்துழைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over / interpreted to the witness in the presence of the accused / accused/ pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.